# விசுவாசிகளுக்கு தேவ ஆலோசனைகள்

************************************************************

## ஆகையால் சகோதரரே..... இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை (2பேதுரு 1:10)

1. உங்கள் இரட்சிப்பு நிறைவேற அனுதினமும் பிரயாசப்படுங்கள். (பிலி 2:12 எபி 2:4)

2. உங்களுக்கென்று ஜெபநேரத்தை ஒதுக்கி அந்த நேரத்தில் தவறாது ஜெபியுங்கள் வேதம் வாசியுங்கள். (தானி6:10 சங்119:28, 43, 74, 89, 92, 97, 135, 148, 158, 174)

3. பரிசுத்தஆவியின் வல்லமையினால் ஆவியில் அனலாயிருங்கள் ஆவியில் நிரம்பியிருங்கள் பாவம் உங்களை அணுகாது. (எபே 5:18 ரோமர் 12:18 1தெச 5:19)

4. அடுத்தவர்களை குறைகூறாமல் உங்களையே சீர்தூக்கிப் பாருங்கள். மற்றவர்களிடம் குறை காணும்போது அவர்களுக்காக கண்ணீரோடு ஜெபியுங்கள். (யாக் 4:11,12 ரோமர் 8:33 கொலோ 3:13)

5. வீண் பேச்சுகளுக்கும் அதிகமான உலக நண்பர்களுக்கும் உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள். அப்படி பேசினாலும் கர்த்தர் உங்களுக்கு செய்த நன்மைகளையும் உங்கள் சாட்சியையுமே பேசுங்கள். (எபே 5:4, 1தீமொ 1:6, 6:20)

6. கர்த்தர் உங்களுக்கு செய்கிற நன்மைகளை மற்றவர்களுக்கும். அற்புதங்களை ஞாயிறு ஆராதனைகளிலும் சாட்சியாக அறிவிக்க மறவாதிருங்கள். (1பேதுரு 2:9 சங் 40:10, 22:22)

7. உங்கள் வாழ்க்கை உயர செழிக்க ஞாயிறு ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுங்கள், குறித்த நேரத்துக்கு முன்னதாக வாருங்கள். (ஏசாயா 58:13, எபி 10:25)

8. யாரிடத்திலும் கடன்படாதிருங்கள், கடனோடு வருகையில் எடுத்துக் கொள்ளப்படமுடியாது. உங்கள் தேவைகளுக்கு தேவனையே நோக்கிப் பாருங்கள். ஊழியர்களிடத்தில் கடன் கேட்காதீர்கள் .காரணம் அந்தப் பணம் முழுவதும் தேவனுடைய ஊழியத்துக்குரியது. உங்களுக்கு கடன் கொடுத்தால் தேவஊழியம் பாதிக்கப்படும். உங்களுக்கும் அது ஆசீர்வாதமாக இருக்காது. (உபா 15:6 ரோமர் 13:8 சங் 37:21)

9. தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கும் வரங்களை ஜெபக்குழுவில் பயன்படுத்துங்கள். (1கொரி 4:12, 2தீமொ 1:6)

10. உங்கள் பொருளாதார வாழ்க்கை உயர, தேவன் உங்களை ஆசீர்வதிக்க, உங்கள் வருமானத்திலும் உங்கள் விளைச்சலிலும் தசமபாகத்தை (பத்தில் ஒரு பாகம்) தேவனுக்கு செலுத்துங்கள். (மல்கியா 3:10, நீதி 3:10) மற்ற விசுவாசிகளையும் தசமபாகம் செலுத்த உற்சாகப்படுத்துங்கள்.

11. உங்கள் தசமபாகம், காணிக்கை மற்றும் பொருத்தனை காணிக்கைகளை செலுத்தும்போது கர்த்தருடைய ஆலயத்தில் கொண்டு வந்து செலுத்துங்கள். யாரிடமும்

கொடுக்க வேண்டாம். ஊழியர்கள் வீடு சந்திக்கும் பொழுது கூட கொடுக்க வேண்டாம். அதுமுறையல்ல ஆலயத்துக்கே கொண்டுவாருங்கள். (மல்கியா 3:10, சங் 96:8)

12. சபையின் அனுமதி பெறாத எந்த ஊழியரையும், விசுவாசியையும் உங்கள் வீடுகளில் ஏற்றுக் கொள்ள வேண்டாம். அப்படி யாராவது வந்துவிட்டால், அவர்களிடம் எங்கள் போதகர் அனுமதியோடு வந்திருக்கிறீர்களா? என கேளுங்கள். இல்லையென்றால் அனுமதி பெற்றுவாருங்கள் என்று ஆலோசனை சொல்லி அனுப்புங்கள். (அப் 15:24 2யோவான் 10)

13. உங்கள் சொந்த வேலைகளுக்கு ஊழியக்காரரை பயன்படுத்தாதிருங்கள். காரணம் தேவனுடைய வேலையை செய்யவே நேரம் போதவில்லை. (அப் 6:2,4)

14. எல்லா இடத்திலும் அன்புடனும், சாந்தத்துடனும், நீடிய பொறுமையுடனும் பழகுங்கள். புதிய விசுவாசிகளை சந்தித்து அவர்களை உற்சாகப்படுத்துங்கள். உங்கள் சோர்வுகளையோ, உங்கள் பெலவீனங்களையோ மற்றவர்களிடம் கூறி அவர்களை பெலவீனப்படுத்தாதிருங்கள். (தேறினவர்களிடம் கூறுங்கள்) (கொலோ 3:12, 14)

15. நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஊழியம் செய்யுங்கள். கைப்பிரதி, புத்தகங்கள், புதிய ஏற்பாடு பைபிள் போன்றவற்றை வாங்கி மற்றவர்களுக்கு கொடுங்கள். பரலோகத்தில் அதிக பலன் உண்டு. (ரோமர் 12:1)

16. எளியவர்களுக்கு உதவி செய்யுங்கள் ஆனால் ஏமாந்து போகாதிருங்கள். முதலில் சிறிய உதவிகளையே செய்யுங்கள். எடுத்தவுடன் பெரிய தொகையை கொடுத்து அவர்கள் ஆத்துமாவுக்கு நஷ்டம் உண்டாக்கி விடாதீர்கள். கடன் கொடுக்கவோ வாங்கவோ எதைச் செய்தாலும் மூப்பர்கள் அல்லது உதவி ஊழியர்கள் அல்லது ஊழியர்களுக்கு அறிவித்து செய்யுங்கள். இல்லையெனில் மனக்கசப்பு உண்டாக நேரிடும்.

17. கர்த்தரை அதிகமாக நேசியுங்கள் அவரையே சார்ந்திருங்கள் அவரையே மகிமைப்படுத்துங்கள். எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செய்யுங்கள். ஸ்தோத்தரிக்காதவர்கள் இருதயம் இருளடையும். (ரோமர் 1:21)

18. உங்கள் பிள்ளைகளையும் சிறுவயதிலிருந்தே ஜெபத்திலும் வேதவாசிப்பிலும் வசனங்களை மனப்பாடம் செய்வதிலும் பழக்குங்கள். ஞாயிறு ஆராதனையில் பிள்ளைகளுக்கான ஜெபத்தில் நேரத்தோடு கூட்டிவந்து விடுங்கள் மிகுந்த ஆசீர்வாதங்களுண்டு. (உபா 6:7 நீதி 22:6)

19. சபையில் நடைபெறுகின்ற எல்லா ஆராதனைகளிலும் பங்கு பெறுங்கள்.

20. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருங்கள். (2பேதுரு 3:12)

**இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம் (ரோமர் 6:17)**